செ.வெ.எண்: 362 நாள்: 06.06.2018

திருநெல்வேலி கோட்டத்தைச் சார்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு திருநெல்வேலி கோட்டாட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கும் செய்தி: -

திருநெல்வேலி கோட்டத்தில் உள்ள திருநெல்வேலி, பாளையங்கோட்டை, சங்கரன்கோவில், திருவேங்கடம் மற்றும் மானூர் வட்டங்களைச் சார்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு கோட்ட அளவிலான மாற்றுத்திறனாளிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் திருநெல்வேலி கோட்டாட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் 08.06.2018 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.00 மணியளவில் திருநெல்வேலி கோட்டாட்சித்தலைவர் அலுவலகத்தில் வைத்து நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்தில் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, சங்கரன்கோவில், திருவேங்கடம் மற்றும் மானூர் வட்டங்களைச் சார்ந்த மாற்றுத்திறனாளிகள் கலந்துகொண்டு தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெற்றுக்கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது என கோட்டாச்சித் தலைவர் திருமதி.மைதிலி. அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் ,திருநெல்வேலி